பொருளாதார அடிப்படையில் இந்த அந்தஸ்து நிர்ணயிக்கப்பட்டது. ஜன நாயக நாட்டில் பொருளாதார அடிப்படையில் அந்த நிர்ணயத்தை மாற்றுவதற்கு அரசாங்கம் முன்வருமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : ரூ. 50 செலவிலும் வாழ்க்கை நடத்துகிறவர்களும் உண்டு. ரூ. 500 செலவிலும் வாழ்க்கை நடத்து கிறவர்களும் உண்டு. ரூ. 50 செலவில் வாழ்க்கை நடத்துபவர்கள் ரூ. 500 செலவில் சிறையிலே வைக்கப்பட்டால் நான் முன்பு கூறியது போல், சிறை சொர்க்க உலகம் ஆகிவிடும், இன்னொரு முறை சிறைக்குப் போக லாம் என்று தோன்றும். ரூ. 500 வாழ்க்கை நடத்துகிறவர்களுக்கு ஓரளவுக்கு வசதிகள் அளிக்கப்படுகின்றன. இல்லையென்றால் பழிக்குப் பழி வாங்குவது ஆகிவிடும். அது தான் அடிப்படை.

Pre-University Course

* 375 *Q.*—SRI K. A. MATHIALAGAN : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) the number of seats available in the Pre-University Course (i) in Government Colleges and (ii) other Colleges;

(*b*) whether there is any proposal to increase the number of seats in Government Colleges; and

(*c*) if so, to what extent?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) (i) 2,720.

(ii) 20,523.

(*b*) & (*c*) Government proposes to start a separate College for Girls in Kumbakonam from the next academic year and this may result in an increase in the number of seats. The exact extent to which there will be increase cannot be stated now.

(அ) (i) 2,720, (ii) 20,523.

(இ) and (ஈ) வருகிற கல்வியாண்டிலிருந்து கும்பகோணத் தில் பெண்களுக்காகத் தனியாக கல்லூரி ஒன்று அமைக்க அரசாங்கம் உத்தேசித்துள்ளது. இதனால் அரசாங்கக் கல்லூரிகளில் புகுமுக வகுப்பில் மொத்த இருக்கை அதிகரிக்கலாம். ஆனால் இந்த அதிகரிப்பு எந்த அளவுக்கு இருக்கும் என்று இப்போது கூற இயலாது.

திரு. கே. ஏ. மதியழகன் : ஆண்டு தோறும் எஸ்.எஸ்.எல்.ஸி. வகுப்பில் தேறுகிறவர்கள் பல ஆயிரக் கணக்காக இருக்கிற காரணத் தினால் புகுமுக வகுப்பில் இருக்கிற இடங்களுக்கும், வருஷம் தோறும் பாஸ் செய்கிற மாணவர்களுக்கும் இருக்கிற வித்தியாசம் மலைக்கும் மடுவுக்கும் இருப்பது போல் இருக்கிற காரணத்தினால், இதைப்பற்றி ஒரு விரிவான திட்டம் ஏதாவது யோசிக்க முடியுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இடத் தேவைக்குத் தக்கவாறு புதிய கல்லூரிகள் அமைக்கப்பட்டு வருகின்றன. இயன்ற அளவுக்கு இருக் கிற ஸ்தானங்களும் அதிகப்படுத்தப்பட்டு வருகின்றன.

திரு. ம. கமலநாதன் : கும்பகோணத்தில் ஒரு கல்லூரி ஆரம்பிப்பது போலவே, அமைச்சர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும், கிருஷ்ண கிரியிலும் ஆரம்பிப்பதாக இருந்தது. தேசிய நெருக்கடி காரணமாக அது ஒத்தி வைக்கப்பட்டிருக்கிறது என்றும், கட்டிட வசதி, மற்ற வசதிகள் செய்து கொடுத்தால், அதையும் கவனிப்பதாக அமைச்சர் அவர்கள் அவரிடம் சென்ற தூதுகோஷ்டியினரிடம் சொன்னதாகத் தெரிகிறது. அது எந்த நிலையில் இருக்கிறது ?

25th March 1963]

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கிருஷ்ணகிரி என்று நான் கூற முடியாது. வடக்கு சேலத்தில் ஒரு கல்லூரி அமைக்க பொதுமக்கள் முன்வரவில்லை என்ற காரணத்தினால் அரசாங்கமே ஆரம்பிக்கலாம் என்ற எண்ணம் எனக்கு இருந்தது, அரசாங்கத்திற்கு இருந்தது. ஆனால், நெருக்கடி நிலையிலே அது இப்பொழுது ஏற்றுக்கொள்ளப்படவில்லை. என்னிடம் வந்திருந்த தூதுகோஷ்டியினரிடம் சொன்னேன். மக்கள் முன்வந்து கட்டிடம் கட்டுவதற்கும், மற்றவைகளுக்கும் நன்கொடை அளித்தால், அரசாங்கத்தில் இந்த ஆண்டிலாவது செலவு இல்லாமல் ஒரு கல்லூரி அமைக்கக் கூடிய சூழ்நிலை ஏற்பட்டால், மேலும் அரசாங்கம் இதுபற்றி யோசிக்கும் என்று சொன்னேன். அதற்குப் பிறகு இந்தத் தூதுகோஷ்டியினருடைய பிரதிநிதியோ அல்லது சட்ட மன்ற உறுப்பினர்களோ என்னிடம் இதுபற்றி வரவில்லை.

திரு. எஸ். மாதவன் : பெண்களுடைய கல்வியில் நமது அமைச்சர் அவர்கள் அதிக அக்கரை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். அமைச்சர் அவர்களுடைய பதவிக் காலத்திலேயே மாவட்டத்திற்கு ஒரு பெண்கள் கல்லூரி திறப்பதற்கு ஏற்பாடு செய்வார்களா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அவ்வாறு செய்ய வேண்டுமென்றால், அமைச்சர் மட்டும் அக்கரை எடுத்துக்கொண்டால் போதாது. கனம் அங்கத்தினர்களும் அக்கரை எடுத்துக்கொள்ள வேண்டும்.

Conscription (College Students)

* 376 Q.—Sri S. MADHAVAN : Will the Hon. the Minister for Finance be pleased to state whether there is any proposal to introduce conscription for College students?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : The State Government are not aware of any such proposal.

திரு. எஸ். மாதவன் : பல்கலைக் கழகம் ஒவ்வொரு கல்லூரியிலும் என். ஸி. ஸி. டிரையினிங் கட்டாயமாகச் செய்ய வேண்டும் என்று தீர்மானம் போட்டிருக்கிறார்கள். அதற்காக திருத்தமும் வந்திருக்கிறது. அப்படிக் கொண்டு வந்தால் அரசாங்கம் ஒத்துழைப்பதற்கு திட்டம் உண்டா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கல்லூரிகளிலே என்.ஸி.ஸி. பயிற்சி கட்டாயமாக அளிப்பது வேறு விஷயம். அதற்கு "கான்ஸ்கிரிப்ஷன் பார் காலேஜ் ஸ்டுடென்ட்ஸ்" என்று அர்த்தம் இல்லை.

திரு. இராம. அரங்கண்ணல் : ராணுவம் எதிர் காலத்தில் இன்றியமையாததாக ஆகிவிட்டது. அறிவை வளர்ப்பதுபோல, ராணுவப் பயிற்சியையும் வளர்ப்பது முக்கியம் என்று கருதி, ராணுவப் படிப்பைக் கட்டாயமாக்க அரசாங்கம் முன்வருமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அந்த அடிப்படையிலேதான் அடுத்த ஆண்டிலே என். ஸி. ஸி. பயிற்சி கல்லூரி மாணவர்களுக்கு கட்டாயமாக்கப்பட்டிருக்கிறது.

Educational reforms

* 377 Q.—Sri K. A. MATHIALAGAN : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(a) when the proposals for the reorganisation of education at Secondary and Collegiate level will be finalised; and

(b) how far the Education Minister's preparatory discussions and conferences with Headmasters of High Schools, Principals of Colleges and Vice-Chancellors have progressed?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : (a) & (b) The State Education Consultative Committee have discussed the various